1993 ஏப்ரல் 22]

தகுதியான தொழில் முனைவோர்களையும் தேர்ந்தெடுத்த பின்னர், தொழிற்பேட்டை அமைப்பதற்கான பணியினை தொடங்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆர்வமாக உள்ளது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்,]

2. அறிவிப்புகள்

(அ) 21–4–1993 அன்று பேரவைக் காவலர்களைத் தாக்கியது தொடர்பாக இரண்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இன்னொரு உறுப்பினரைத் தேடி வருவதாகவும் காவல் துறையிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையில் 21–4–1993 அன்று சில காவலர்களைத் தாக்கியதாக காவல் துறையில் பெற்ற புகாரின் அடிப்படையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி மற்றும் சி. ஞான சேகரன் ஆகியோர் நேற்று 21–4–1993 இரவு கைது செய்யப் பட்டு சென்னை கோட்டையில் உள்ள பி. 3 காவல் நிலையத் திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கே காவல் நிலைய பெயிலிலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்தால் சொந்த பெயிலிலேயே அவர்கள் செல்லலாம் என்று தெரிவிக்கப் பட்டு, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் காவல் நிலையத் திற்குள்ளேயே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரவையிலேயிருந்து பெற்ற புகாரின் அடிப்படையிலேயும் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரான திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்களைக் காவலர்கள் தேடி வருவதாகவும் அவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது Thiru. P.V. Rajendran, M.L.A. is still at large and all efforts are being taken to locate him என்கின்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.